**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்**
**நீதிமன்றம், ஆத்தூர்**
**முன்னிலை: திரு.S.அன்புதாசன்., B.com., B.L.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஆத்தூர்**
**2025ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 8-ம் நாள் புதன்கிழமை**

<u>அசல் வழக்கு எண்.47/2021-ல் இ.ம.எண் 2/2025</u>

முருகேசன் .... மனுதார்/2ம் பிரதிவாதி

/ எ தி ர் /

அங்கயற்கண்ணி .... எதிர்மனுதார்/வாதி

இம்மனு என் முன்னர் 24.09.2025ம் நாளன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதார்/2ம்பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.அ.ஆரோக்கியசாமி அவர்கள் முன்னிலையாகியும், எதிருரை தாக்கல் இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்ட நிலையிலும், மனுதார்/2ம் பிரதிவாதி தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் இன்று வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இம்மன்றத்தால் பிறப்பிக்கப்படும் :

<u>உ த் த ர வு</u>

நிர் தாவா வழக்கில் மனுதாரர் தரப்பு ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்ய இயலாத காலதாமதத்தை மன்னித்து ஏற்றுக் கொண்டும், வழக்கு

சம்பந்தபட்ட நகல்கள் ஆகியவற்றை மனுதாரர் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய உத்தரவாக வேண்டும் என்று உவிமுச கட்டளை 8, விதி 3(A)–ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுதார்/2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாண வாக்குமூலத்தின் மனுவின் சுருக்கம் பின்வருமாறு</u> :–**

தாவா அசல் வழக்கில் மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்த சமயத்தில் கீழ்கண்ட ஆவணங்கள் திண்டுக்கல் J.M.II நீதிமன்றத்தில் நகல் போட்டு கிடைக்காததால் நீதிமன்றத்தில் உரிய நேரத்தில் எதிர்வழக்குரையுடன் மனுதாரர் தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்ய இயலவில்லை. ஆகவே, வழக்கு சம்பந்தபட்ட நகல்கள் ஆகியவற்றை மனுதாரர் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் இருக்கின்றது. மேற்படி தவறு வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல, தெய்வாதீனமாக ஏற்பட்டதாகும். மேற்படி கால தாமதத்தை மன்னித்து ஏற்றுக் கொண்டு உத்தரவாக வேண்டி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) எதிருரை தாக்கல் இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

4)இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

5) **<u>பிரச்சனைக்குரிய தீர்வு</u>**

மனுதார்/2ம் பிரதிவாதி தரப்பு வாதம் மற்றும் வழக்குக்கோப்பினைப் பரிசீலனை செய்ததில், மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்த சமயத்தில் கீழ்கண்ட ஆவணங்கள் திண்டுக்கல் J.M.II நீதிமன்றத்தில் நகல் போட்டு கிடைக்காததால் நீதிமன்றத்தில் உரிய நேரத்தில் எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்ய இயலவில்லை என்பதாலும், மேற்படி கால தாமதத்தை மன்னித்து ஏற்றுக் கொண்டும் மனுதாரர் தரப்பு வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களை குறியீடு செய்ய உத்தரவாக வேண்டிய நிலையில், எதிருரை தாக்கல் இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே, இம்மனுவை அனுமதிப்பது தான் நீதியின்பால் உகந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவில்,** இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, கையொப்பமிடப்பட்டு, 2025 ம் நாளன்று அக்டோபர் திங்கள் 8ம் நாளாகிய இன்று திறந்த அவையில் அவையறியப் பகரப்பட்டது.

SUBRAMANIYAN ANBUTHASAN
Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2025.11.07 16:42:27 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்**
**ஆத்தூர்**

**மனுதாரர் தரப்பு ஆவணம்:**

| | | |
|---|---|---|
| 1. | 21.12.2017 | திண்டுக்கல் J.M.No.II கோர்ட்டு C.C.No.80/2016 குற்ற பத்திரிக்கை நகல் |
| 2. | --- | தகவல் உரிமம் சட்டத்தின்படி திண்டுக்கல் CJM நீதிமன்றத்தில் மூலம் திண்டுக்கல் J.M.No.II கோர்ட்டு C.C.No.80/2016ல் வழக்கு சம்பந்தபட்ட நகல்கள் |

SUBRAMANIYAN ANBUTHASAN
Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2025.11.07 16:42:36 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்**
**ஆத்தூர்**

முதன்மை மாவட்ட நீதிமன்றம்
திண்டுக்கல்
அ.வ.எண் 47/2021-ல்
இ.ம.எண் 2/2025
நாள் 8.10.2025
உத்தரவு